சுருக்கம்

பள்ளிக்கல்வி - ஆசிரியர் தேர்வு வாரியம் நடத்தும் அனைத்து தேர்வுகளிலும் (TET தவிர) கட்டாயத் தமிழ் மொழித்தகுதித் தாளினை அறிமுகம் செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வித்(ஆதேவா) துறை

அரசாணை(நிலை) எண்.121 | நாள்: 01.07.2022

திருவள்ளுவர் ஆண்டு 2053

சுபகிருது வருடம், ஆனி - 17

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 133, மனித வள மேலாண்மை (எம்)த் துறை, நாள் 01.12.2021.
2. அரசாணை (நிலை) எண்.49, மனிதவள மேலாண்மை (எம்)த் துறை,நாள் 23.05.2022.
3. ஆசிரியர் தேர்வு வாரியத் தலைவரின் கடித ந.க.எண். 03215/E3/E4(S1)/2022,நாள் 27.04.2022.

---

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தெரிவு முகமைகளால் (Recruiting Agencies) அரசுப் பணிகளுக்காக நடத்தப்படும் போட்டித் தேர்வுகள் அனைத்திலும், நியமன அலுவலர்களால் தேவைப்படும் நேர்வுகளில் நடத்தப்படும் எழுத்துத் தேர்வுகளிலும் தமிழ் மொழித் தாளினை தகுதித் தேர்வாக கட்டாயமாக்கி அரசு ஆணையிட்டுள்ளது. அவ்வாணையில் ஆசிரியர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், தமிழ்நாடு வனத்துறை சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம் உள்ளிட்ட மாநிலத்தில் உள்ள இதர தெரிவு முகமைகளைப் பொருத்தவரையில், கட்டாயத் தமிழ் மொழித் தகுதித் தேர்வினை நடத்துவது தொடர்பான மேற்படி வழிகாட்டு நெறிமுறைகள் சம்மந்தப்பட்ட நிர்வாகத் துறைகளால் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்காண் அரசாணையினை தொடர்ந்து, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து போட்டித் தேர்வுகளிலும் (TET தவிர) கட்டாயத் தமிழ் மொழித்தகுதித் தாளினை நடைமுறையில் உள்ள வழிமுறைகளை பின்பற்றி நடத்துவதற்கு ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார். மேலும், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தெரிவு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழி தகுதித் தேர்வினை எழுதுவதிலிருந்து

மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு விலக்களித்து ஆணை வழங்கப்பட்டுள்ளதன்படி ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் அனைத்து தேர்வுகளிலும் (TET தவிர) மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு தமிழ் மொழி தகுதித் தாளினை எழுதுவதற்கு விலக்களிக்கப்பட வேண்டுமென ஆசிரியர் தேர்வு வாரிய தலைவர் தெரிவித்துள்ளார்.

3. ஆசிரியர் தேர்வு வாரிய தலைவரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசிலனை செய்து, பின்வருமாறு ஆணை வெளியிடப்படுகிறது:-

(i) ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதி தேர்வு (TET) தவிர மற்ற அனைத்து தேர்வுகளுக்கும் தமிழ் மொழித் தகுதித் தாள் கட்டாயமாக்கப்படுகிறது.

(ii) மேற்படி, தமிழ்மொழி தேர்வானது, பகுதி-அ என கொள்குறி வகையில் (Objective Type) 30 வினாக்கள் 50 மதிப்பெண்களுக்கு 30 நிமிடத்திற்கு தகுதித்தேர்வாக நடத்தப்படும். தாவரிசைக்கு இம்மதிப்பெண் எடுத்துக் கொள்ளப்படாது.

(iii) தமிழ் மொழித் தகுதித் தேர்வுக்கான பாடத்திட்டம் பத்தாம் வகுப்பு தரத்தில் அமையும்.

(iv) நடைமுறையில் உள்ள அனைத்து முதனிலைத் தேர்வுகளும் பகுதி-ஆ என நடத்தப்படும்.

(v) பகுதி – அ தேர்வில் குறைந்தபட்சம் 40 சதவீத மதிப்பெண் தேர்ச்சி (Minimum Qualifying Marks) பெற்றால் மட்டுமே, பகுதி-ஆ, போட்டித் தேர்வுத்தாள் / தாட்கள் மதிப்பீடு செய்யப்படும்.

(vi) பகுதி-ஆ விடைகளுக்கான மதிப்பெண்கள் மட்டுமே தரவரிசைக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

(vii) மேற்காண் தமிழ் மொழி தகுதித் தேர்வினை நடத்தும் போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தெரிவு முகமைகளால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் தமிழ் மொழித் தகுதித் தேர்வினை எழுதுவதிலிருந்து மாற்றுத்திறனாளி தேர்வர்களுக்கு விலக்களித்து வெளியிடப்பட்டுள்ள மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையினை பின்பற்றி நடத்தப்பட வேண்டும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

காகர்லா உஷா
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-6.
பள்ளிக்கல்வி ஆணையர், சென்னை-6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை-6.

நகல்
உயர்கல்வித்துறை, சென்னை-9.
சட்டத்துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை,
சென்னை-9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
சென்னை-9.
சமூகநலம் (ம) மகளிர் உரிமைத்துறை, சென்னை-9.
மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை-9.
முதன்மை செயலாளர் அவர்களின்
தனிச் செயலர், பள்ளிக்கல்வித்துறை,
சென்னை-9.
இருப்பு கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அரசு சார்புச் செயலாளர்.